|b09291 57ballaF (English)

|c09291_000_57balla.xml (Task 179216)

|v1

ஞாயிறு மதியக் கூட்டம்

|v2

பொது மாநாடு

|v3

ஞாயிறு மதியக் கூட்டம்

|v4

அக்டோபர் 3, 2010

|v5

ஓ அந்தத் தீயவனுடைய வஞ்சனையான திட்டம்

|v6

போதையின் அடிமைத்தனம்

|v7

ஞானவார்த்தை

|v8

ஜெபம்

|v9

பாவநிவர்த்தி

|v10

பொது மாநாடு

|v11

ஓ அந்தத் தீயவனுடைய வஞ்சனையான திட்டம்

|v12

மூப்பர் எம். ரசல் பாலார்ட்

|v13

பன்னிரு அப்போஸ்தலர் குழுமம்

|v14

போதையின் அடிமைத்தனத்திலிருப்பவர்களுக்கு நம்பிக்கை உண்டு, இந்த நம்பிக்கை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியின் மூலமாகவே வருகிறது.

|v15

சகோதர சகோதரிகளே, இங்கே ராக்கி மலைகளில் இலையுதிர் பருவத்தின் ஆரம்பத்தில், பச்சை நிறத்திலிருந்து பிரகாசமான ஆரஞ்சு, சிவப்பு, மஞ்சள் நிறங்களாக இலைகள் மாறுவதில் அது வியக்கத்தக்க  நிறங்களைக் கொண்டுவருகிறது. இலையுதிர் காலத்தின்போது, குளிருக்கும், வசந்த காலத்தின் எளிய அழகிற்கான ஆயத்தத்திற்கும் இயற்கை அனைத்தும் மாறும் நிலையிலிருக்கிறது.

|v16

குளிர்காலத்தில் ஏற்படும் உணவுப்பற்றாக்குறையை எதிர்பார்த்து தங்கள் உடல்களை வளர்க்கவும் பாதுகாக்கவும் ஏறக்குறைய மிகுந்த ஆர்வத்தில் பசிக்கு விருந்தளிக்க நல்ல தண்ணீரின் மீன்களான ட்ராட் ஓடிவருவதால் இலையுதிர்காலம் மீன்பிடிப்பவர்களுக்கு ஒரு ஆனந்தமான காலம்.

|v17

தந்திரமான திறமையால் ட்ராட்டைப் பிடிப்பதே மீன்பிடிப்பவர்களின் நோக்கம். ட்ராட் மீன்களின் நடத்தை, பருவநிலை, தண்ணீரின் வேகம், இந்த மீன்கள் சாப்பிடும் பூச்சிகள் மற்றும் எப்போது இந்த பூச்சிகள் பொரிக்கும் என்ற விவரங்களை தேர்ச்சிபெற்ற மீனவர்கள் ஆராய்கிறார்கள். அவர் பயன்படுத்துகிற தூண்டில்களை எப்போதுமே அவரே கையால் உருவாக்குகிறார். சின்ன வித்தியாசமிருந்தாலும் இரையை மீன் பிடிக்காதென்பதால், தூண்டில் முள்ளில் இணைக்கப்பட்டிருக்கும் இந்த செயற்கையான பூச்சிகள் ஒரு சரியான இரையைப்போலிருக்கவேண்டும் என்று அவருக்குத் தெரியும்.

|v18

*ட்ராட் மீன்கள் தண்ணீரின் மேல்மட்டத்தை கிழித்து வெளியே வந்து இரை யைப் பிடித்து, இறுதியாக களைப்படைந்து தண்ணீருக்குள் போகும்வரை தா ங்கிப்பிடிப்பதைப் பார்ப்பதற்கு மிக வியப்பாயிருக்கும். இயற்கையின் நேர்த்தி யான படைப்புகளில் ஒன்றான ட்ராட் மீன்களின் திறமைக்கு எதிராக மீனவர்க ளின் பொறிவைக்கும் அறிவின் போட்டி இது.*

|v19

*ஏமாற்றி ஒரு மீனைப்பிடிக்க செயற்கையான தூண்டில்களை பயன்படுத்துதல், சோதித்து, ஏமாற்றி, நம்மை பொறி வைத்துப்பிடிக்க எப்போதும் முயற்சிக்கிற லூசிபரின் வழிக்கு ஒரு எடுத்துக்காட்டு.*

|v20

*ட்ராட் மீன்கள் பசியால் விரட்டப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொண்ட மீனவர்களைப்போல, நமது பசி அல்லது பலவீனத்தைத் தெரிந்துகொண்ட லூ சிபரும் அவனது இரக்கமில்லாத ஆதிக்கத்தால் நமது வாழ்வின் சமாதானத்திற் கு இடையூறாக இருக்கிற போலியான தூண்டில்களுடன் நம்மை சோதிக்கிறா ன். மீனைப் பிடித்து, அதை எதுவும் செய்யாமல் மீண்டும் தண்ணீருக்குள் விட் டுவிடுகிற மீனவனைப் போல, லூசிபர் நம்மைப் போக விடமாட்டான். அவ னைப்போலவே அவனால் பலியாக்கப்பட்டவர்களை துர்ப்பாக்கியவன்களாக் குவதே அவனது நோக்கம்.*

|v21

*“அவன் (லூசிபர்) பரலோகத்திலிருந்து வீழ்ந்து, என்றென்றைக்குமாய்த் துர்பா க்கியவானாய் போவதினிமித்தம் மனுஷகுலம் யாவும் துர்ப்பாக்கியமடைய வகைத்தேடுகிறான்” (2 நெப்பி 2:18) என நெப்பி சொன்னான்.*

|v22

*லூசிபர் ஒரு புத்திசாலியானவனாகவும் தந்திரசாலியானவனாகவும் இருக்கிறா ன் என, இன்று எனது சகோதரர்களுடன் சேர்ந்து நானும் என் குரலை எழுப்பி க் கூறுகிறேன். பொய் சொல்லும் அவன் திறமையும் தீமையை நன்மையென்று ம் நன்மையை தீமையென்றும் நம்மை நம்பவைக்கும் அவனது திறமையே, நம க்கு எதிராக அவன் பயன்படுத்தும் முக்கியமான வழிகளில் ஒன்று. பரலோகத் தின் மகா ஆலோசனைக் குழுவின் ஆரம்பத்திலிருந்தே, மனிதனுக்கு தேவன் கொடுத்த சுயாதீனத்தை அழிக்க சாத்தான் விரும்பினான்.*

|v23

“மனிதர்களை ஏமாற்றவும், அவர்களை குருடாக்கவும் அவனது விருப்பப்படி அவர்களை அடிமையாக நடத்தவும் அவன் சாத்தானாகவும், பொய்களின் தகப்பனாகவும் மாறினான்” (மோசே 4:3--4 பார்க்கவும்).

|v24

தேவனால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட சுயாதீனத்தின் போர் இன்றும் தொடர்கிறது. போலியானவைகளால் நம்மை அவன் பிடித்துக்கொள்ளும்படியாக நாம் தடுமாறி அவனது பூச்சிகளைப் பிடிப்போம் என்ற நம்பிக்கையில் சாத்தானும் அவனது பணியாளர்களும் நம்மைச் சுற்றி அவர்களின் தூண்டில்களைப் போட்டிருக்கிறார்கள். சுயாதீனங்களைக் களவாட போதையின் அடிமைத்தனத்தினை அவன் பயன்படுத்துகிறான். அகராதியின்படி எந்தவிதமான போதைக்கும் அடிமையாகுவதென்பதற்கு எதோ ஒன்றிற்கு சரணடைந்துவிடுவது என்று அர்த்தம். அப்படியாக, சுயாதீனத்தை கைவிட்டுவிட்டு உயிருக்கு அபாயமான சில பொருளை அல்லது நடத்தையை சார்ந்திடுதல்.1

|v25

சந்தோஷ மையம் என்றழைக்கப்படுகிற ஒரு அமைப்பு நமது மூளையிலிருக்கிறதென ஆராய்ச்சியாளர்கள் நமக்குக் கூறுகிறார்கள்2. சில குறிப்பிட்ட போதைப்பொருட்கள் அல்லது நடத்தையால் ஊக்குவிக்கப்படும்போது, அது நமது தன்னம்பிக்கை, தீர்மானம், உண்மை மற்றும் நற்குணத்தை அடக்கியாள்கிற நமது மூளையின் பகுதியை மேற்கொள்கிறது. சரியென்று அவனுக்குத் தெரிகிறவற்றை கைவிட்டுவிட இது நடத்துகிறது. அது நடக்கும்போது, நாம் தூண்டிலில் சிக்கி, லூசிபர் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடுகிறான்.

|v26

செயற்கையான பொருட்களுடனும் தற்காலிகமான சந்தோஷத்தின் நடத்தையுடனும் எவ்வாறு நம்மை பயன்படுத்துவதென்றும், சிக்கவைப்பதுவென்றும் சாத்தானுக்குத் தெரியும். அதிலிருந்து மீண்டு வரவும், அழிவுக்கேதுவான நிந்தனையிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலை அடையவும், சுயமதிப்பையும் சுதந்தரத்தையும் மீண்டும் பெறவும் போராடும் ஒருவரின் பாதிப்பை நான் பார்த்திருக்கிறேன்.

|v27

தவறாகப் பயன்படுத்தப்படும்போது அதிக அடிமைத்தனத்திற்குள்ளாக்கும் சில போதைப்பொருட்கள் மூளையை திசைதிருப்பி ஒருவரின் சுயாதீனத்தை எடுத்துப்போடுகிறது. நிகோடின், ஓபியம், ஹெராயின் ,மார்பின் மற்றும் சில வலிநிவாரணிகள், டிராங்குலைசர்கள், கோகைன், ஆல்கஹால், மரிஜுனா, மெதாம்பெட்டமைன்ஸ் போன்றவைகள் அவைகளில் அடங்கும்.

|v28

வலிகளிலிருந்தும் வேதனைகளிலிருந்தும் நிவாரணம்பெற சரியான மருந்துகளைக் கொடுக்கும் பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். துரதிருஷ்டவசமாக இன்றைய நமது சமுதாயத்தில், நமது சொந்த சபை அங்கத்தினர்களில் சிலரையும் சேர்த்து அநேக மக்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி, கொடுக்கப்படும் மருந்துகளையும் மிதமிஞ்சிப் பயன்படுத்துகிறார்கள். அனைத்துப் பொய்களின் தகப்பனான லூசிபர் இதைப்பற்றி தெரிந்து கொண்டு, ஒருவரின் சுயாதீனத்தை எடுத்துப்போட அவனது ஆதிக்கத்தைப் பயன்படுத்தி தனது பயங்கரமான சங்கிலிகளால் போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களை சிறைபிடிக்கிறான் (2 நெப்பி 28:22 பார்க்கவும்).

|v29

ஒரு உள்ளூர் மருத்துவமனையில் மனநோய் பிரிவிலிருந்த ஒரு சகோதரியுடன் சமீபத்தில் நான் பேசினேன். சரியான மனநிலை, நல்ல உடல் ஆரோக்கியம், ஒரு அற்புதமான திருமணம் மற்றும் குடும்பத்திலிருந்து, மனநோய், தளர்ந்துவந்த ஆரோக்கியம், உடைந்து போன குடும்ப வாழ்க்கை என்ற அவளது துக்ககரமான பயணத்தைப்பற்றி என்னோடு அவள் பகிர்ந்துகொண்டாள். இவை எல்லாமுமே, கொடுக்கப்பட்ட வலிநிவாரண மருந்துகளை மிதமிஞ்சிப் பயன்படுத்தியதால் ஆரம்பமானது.

|v30

எங்களது உரையாடலுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு கார் விபத்தில் அவளது முதுகு காயமடைந்தது. தாங்கமுடியாத வலியிலிருந்து நிவாரணம்பெற அவளது மருத்துவர் ஒரு மருந்தை எழுதிக்கொடுத்தார். தனக்கு அதிகமான மருந்துகள் தேவைப்படுமென அவள் நினைத்து போலியான மருந்துச்சீட்டை தயாரித்து, இறுதியாக ஹெராயின் வாங்குவதில் வந்துநின்றது. இது அவளை சிறைபிடிக்கவும், அடைத்துவைப்பதிலும் கொண்டுபோய்விட்டது. போதைப் பொருட்கள் மேலிருந்த வெறி, அவளது திருமணத்தைப் பாதித்தது. அவளது கணவன் அவளை விவாகரத்து செய்து, பிள்ளைகளை அவர் வளர்த்துவந்தார். அந்த மருந்துகள் தனது வலியைக் குறைத்ததோடு, தற்காலிக ஆனால் மிகுந்த ஆனந்தத்தின், நன்றாக இருந்த உணர்வைக் கொடுத்ததாகவும் அவள் என்னிடம் சொன்னாள். ஆனால் மருந்துகளின் ஒவ்வொரு அளவின் வீரியமும் ஒரு சிலமணி நேரங்களே நீடித்து ஒவ்வொரு முறை பயன்படுத்தும்போதும் நிவாரணத்தின் நேரம் குறைந்துகொண்டே போனதாகத் தோன்றியது. அதிகதிகமான மருந்துகளை அவள் எடுக்க ஆரம்பித்து, அவள் போதையின் வட்டத்திற்குள் மாட்டிக்கொண்டாள். போதைப்பொருட்களே அவளது வாழ்க்கையானது. அவளிடம் பேசியதற்கு முந்தைய இரவில் அவள் தற்கொலை செய்ய முயன்றிருக்கிறாள். அவளது உடல், உணர்வு, ஆவிக்குரிய உணர்ச்சிகளுடன் இனியும் அவளால் சமாளிக்க முடியவில்லை. தப்பிக்க எந்த வழியுமில்லாமல் எந்த நம்பிக்கையுமில்லாமல் அவள் சிக்கிக்கொண்டாள்.

|v31

மருந்து சீட்டுகளையும், மிதமிஞ்சிய மருந்துகளையும் பயன்படுத்திய சகோதரி யின் பிரச்சினை அரிதானதல்ல; இது நம்மைச் சுற்றி நடைபெற்றுக்கொண்டி ருக்கின்றன. சில இடங்களில் வாகன விபத்துக்களைக் காட்டிலும் மருந்துச் சீ ட்டுக்களை தவறாக மிதமிஞ்சிப் பயன்படுத்துவதால் அதிகமான மக்கள் மரிக் கிறார்கள்3. சகோதர சகோதரிகளே, உங்களை சிக்கவைக்கும் எந்தவிதமான பொருட்களுக்கும் விலகியிருங்கள். எதையாவது ஒருமுறை உறிஞ்சுவதோ, அ ல்லது ஒரு மாத்திரை அல்லது ஆல்கஹாலை ஒரு தடவை குடிப்பதோகூட போதைக்கு வழிவகுக்கலாம். ஒருமுறை குடிப்பதே போதையிலிருந்து விடுபடு வதற்கும் குடிபழக்கமில்லாதிருப்பதற்கும் உள்ள வித்தியாசமென ஆல்கஹாலி லிருந்து விடுபட முயற்சிக்கும் ஒருவர் என்னிடம் சொன்னார். சாத்தானுக்கு இ து தெரியும். விரைவிலேயே அடிமைத்தனமாக்குகிற, தனது போலியான தூண் டில்களால் சாத்தான் உங்களை சிக்கவைக்க விடாதீர்கள்.

|v32

இப்போது சகோதர சகோதரிகளே, நான் சொல்லிக்கொண்டிருப்பதை தயவு செய்து தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். குணமாக்கப்படுகிற வியாதியால் க ஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அல்லது மிகுந்த வலியால் அவதிப்பட்டுக்கொ ண்டிருப்பவர்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துச் சீட்டுக்களைப்பற்றி நான் சந் தேகப்படவில்லை. அவைகள் உண்மையிலேயே ஆசீர்வாதமானது. மருத்துவர் களால் கொடுக்கப்படும் மருந்தின் அளவை நாம் கவனமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே நான் சொல்லிக்கொண்டிருப்பவை. வாலிப பிள்ளைக ளோ அல்லது வேறுயாரோ அவைகளை எடுத்துவிடாதபடி அத்தகைய மருந் துகளை ஒரு பாதுகாப்பான இடங்களில் நாம் வைக்கவேண்டும்.

|v33

நமது சமுதாயத்தில், தனிப்பட்ட முறையில் அழிவுக்கேதுவானதும் மிக வேக மாக பரவுவதாகவுமுள்ள சூதாட்டம் மற்றும் தீங்கிழைக்கும் ஆபாசப்படங்கள் போன்ற சில கேடு விளைவிக்கக்கூடிய, அடிமைத்தனமாகிறவற்றைப்பற்றி மி குந்த அக்கறை எடுக்கவேண்டும். எந்தவிதமான போதையின் அடிமைத்தனமு ம் ஏதாவதொன்றுக்கு சரணடைவதே என்பதையும், அப்படியே சுயாதீனத்தை கைவிட்டுவிட்டு அடிமையாகுவதாகும் என்பதையும் சகோதர சகோதரிகளே நினைவுகொள்ளுங்கள். அப்படியே, வீடியோ விளையாட்டுகளும், கைப்பேசி யில் செய்திகளை அனுப்புவதும் இந்த பட்டியலில் சேர்க்கப்படவேண்டும். வீ டியோ விளையாட்டுகளில் ஒரு படிக்குப்பின் ஒரு படியாக போய், இப்படி வி ளையாடுபவர்களில் சிலர் ஒரு நாளில் 18 மணிநேரம் விளையாடுவதாகச் சொ ல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் அப்படியே அவர்களால் விடமுடியா மல்போய் தங்கள் வாழ்வின் பிறகாரியங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. கைப் பேசியில் செய்திகள் அனுப்புவது ஒரு போதையைப் போன்றாகி, தனிப்பட்ட மனித உறவுகளின் முக்கியத் தொடர்பை இழக்கச்செய்கிறது. தம்முடைய இ ரு வாலிபர்கள் ஒருவர் பக்கம் ஒருவர் நின்றுகொண்டு ஒருவருக்கொருவருடன் பேசுவதற்குப் பதிலாக, கைப்பேசியில் செய்திகளை பரிமாறிக்கொண்டிருந்தா ர்கள் என சிறிதுகாலத்திற்கு முன் ஆயர் ஒருவர் என்னிடம் கூறினார்.

|v34

போதையை ஒரு “மூளையின் வியாதி”4 என மருத்துவ ஆராய்ச்சி விவரிக்கிறது. இது உண்மையே, ஆனால் சாத்தானின் பிடியில் ஒருதடவை ஒருவன் மாட்டிக்கொண்டால், ஆவியின் ஒரு வியாதியாகவும் அது மாறுகிறது. ஆனால் எந்தப் போதையின் அடிமைத்தன வட்டத்தில் ஒருவன் மாட்டிக்கொண்டாலும், எப்போதுமே நம்பிக்கை உண்டு. இந்த நித்திய சத்தியத்தைப்பற்றி தீர்க்கதரிசி லேகி அவனது குமாரர்களுக்குப் போதித்தான்: “ஆதலால் மாம்சத்திற்கேற்றபடி, மனுஷர் சுதந்தரவாளிகளாய் இருக்கிறார்கள். மனுஷனுக்குத் தேவையானவை எவையோ, அவைகளே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. மனுஷர் யாவருக்கும் மகத்துவமுள்ள மத்தியஸ்தரானவரின் மூலம் விடுதலையையும், நித்திய ஜீவனையும் தேர்ந்தெடுக்கவும் அல்லது தன்னைப்போல மனுஷர் யாவரும் துர்ப்பாக்கியவான்களாய் இருக்க வகைதேடுகிற அந்தப் பிசாசின் துரைத்தனத்தினாலும், வல்லமையாலும் அடிமைத்தனத்தையும்; மரணத்தையும் தேர்ந்தெடுக்கவும் அவர்கள் சுதந்தரவாளிகளாய் இருக்கிறார்கள்” (2 நெப்பி 2:27).

|v35

போதைக்கு அடிமையானவர் எவரும் அதை விட்டுவிட விருப்பமிருந்தால், ஆவிக்குரிய சுதந்தரத்திற்கு ஒரு வழியிருக்கிறது. அது அடிமைத்தனத்திலிருந்து தப்பிக்க ஒரு வழி. அது நிரூபிக்கப்பட்ட ஒரு வழி. சிரத்தையான, மிகுந்த அக்கறை மற்றும் நமது ஆவிகளையும் சரீரங்களையும் உருவாக்கின நமது பரலோகப் பிதாவுடன் கொண்டிருக்கும் தொடர்பான ஜெபத்துடன் அது ஆரம்பமாகிறது. ஒரு கெட்ட பழக்கத்தை நாம் விட்டுவிட முயற்சிக்கும்போது, அல்லது எவ்வகையான பாவத்திற்காகவும் மனந்திரும்பும்போதும் நாம் பின்பற்றுகிற அதே வழிதான் இதுவும். நமது இருதயம், நமது சரீரம், நமது மனம் மற்றும் நமது ஆவிக்குரிய மாற்றத்திற்கான சூத்திரம் வேதங்களில் காணப்படுகிறது.

|v36

தீர்க்கதரிசி மார்மன் நமக்கு ஆலோசனையளிக்கிறான்: “ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, தேவனுடைய குமாரர்களாகவும், அவர் தூயவராயிருப்பதைப் போலவே நாமும் தூய்மையாக்கப்படவும், அவரது அன்பினால் நீங்கள் நிறைக்கப்பட பிதாவினிடத்தில் ஊக்கத்தோடு ஜெபியுங்கள்” (மரோனி 7:48).

|v37

போதைக்கு அடிமையானவர்களுக்கு நம்பிக்கை உண்டென, இந்த வேதவசனமும் அநேக பிற வேதவசனங்களும் நமக்கு சாட்சியளிக்கின்றன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியின் மூலமாகவும், தேவனுக்கு முன்பாக ஒருவன் தன்னை தாழ்த்துவதாலும்,போதையின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட வேண்டுவதாலும், ஆழ்ந்த ஜெபத்தில் நமது இருதயத்தையும் விருப்பத்தையும் அவரிடத்தில் ஏறெடுப்பதாலும், இந்த நம்பிக்கை வருகிறது.

|v38

*போதையின் அடிமைத்தனத்திலிருப்பவர்கள் ஆசாரியத்துவத் தலைவர்களிடமிருந்து ஆலோசனையை நாடும்போது அவர்களால் உதவமுடியும். தேவைப்படும்போது, தகுதியுள்ள, சான்றுபெற்ற ஆலோசகர்களிடமும், எல்.டி.எஸ் குடும்ப சேவை மையத்திடமும் அவர்களை அவர்கள் அனுப்பலாம். ஆல்கஹாலிக்ஸ் அனானிமஸ் என்ற அமைப்பின் பன்னிரண்டு முக்கிய படிகளிலிருந்து தொகுக்கப்பட்ட போதையின் அடிமைத்தனத்திலிருந்து மீளுதல் திட்டம், எல்.டி.எஸ் சேவை மையத்திடம் எளிதாகக் கிடைக்கிறது.*

|v39

*சமாதானத்தைக் காணவும், போதை பழக்கத்தின் ஆர்வத்தை மேற்கொள்ளவும் ஆவிக்குரிய பெலத்தைப்பெற ஆழ்ந்த ஜெபமே திறவுகோல் என்பதை போதையின் அடிமைத்தனத்திற்குள்ளான  தனிப்பட்டவர்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்திற்குள்ளே கையாளுபவர்களுக்கு, நான் மீண்டும் சொல்கிறேன். பரலோகப் பிதா அவரது பிள்ளைகள் அனைவரையும்  நேசிக்கிறார், ஆகவே அவருக்கு நன்றிசெலுத்துங்கள். அவரில் உண்மையான விசுவாசத்தை வைத்திருங்கள். நீங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் போதையின்  ஆர்வத்தை மேற்கொள்ள பெலத்திற்காக அவரை கேளுங்கள். உங்கள் பெருமையை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு உங்கள் வாழ்வையும் இருதயத்தையும் அவரிடத்தில் திருப்புங்கள். கிறிஸ்துவின் தூய்மையான அன்பினாலும் நிரப்பப்பட கேளுங்கள். அநேக முறை நீங்கள் இதைச் செய்ய நேரிடலாம், ஆனால் உங்கள் சரீரமும், மனமும், ஆவியும் மாறி, சுத்தப்படுத்தப்பட்டு குணமாக்கப்பட்டு நீங்கள் விடுதலையாவீர்களென நான் சாட்சியளிக்கிறேன். “நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல், ஜீவ ஒளியை அடைந்திருப்பான் (யோவான் 8:12) என இயேசு சொன்னார்.*

|v40

*நமது இரட்சகரைப்போலாக வேண்டுமென்பது நமது நோக்கமாயிருப்பதாலும் இறுதியாக நமது பரலோகப் பிதாவுடன் வாழ தகுதிபெற வேண்டுமென்பதாலும் நாம் ஒவ்வொருவரும் மார்மன் புத்தகத்தில் ஆல்மா தீர்க்கதரிசியால் விவரிக்கப்பட்டவற்றைப்போல நமது இருதயங்களில் பெரிய மாற்றத்தை உண்டாக்க வேண்டும் (ஆல்மா 5:14 பார்க்கவும்). பரலோகத்திலுள்ள நமது பிதாவிடமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிடமும் கொண்ட நமது அன்பு, நமது அன்றாட தீர்மானங்களிலும் நடவடிக்கைகளிலும் பிரதிபலிக்கவேண்டியது அவசியம். அவர்களின் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு சமாதானத்தை, சந்தோஷத்தை, மகிழ்ச்சியை அவர்கள் வாக்களித்திருக்கிறார்கள்.*

|v41

*சகோதர சகோதரிகளே. மனிதர்களைப் பிடிக்கிற போலியான மீனவனான லூசிபரால் நமக்குக் கொடுக்கப்படுகிற செயற்கையான பூச்சிகளுக்கு நாம் யாவரு*

*ம் கவனமாயிருப்போமாக. அவன் கொடுக்கிற அநேக அபாயகரமான காரிய ங்களை கூர்ந்துநோக்கவும், மறுக்கவும், ஞானமும் ஆவிக்குரிய உள்ளுணர்வும் நமக்கிருப்பதாக.*

|v42

*எந்தவிதமான போதைகளுக்கும் பலியான உங்களுக்கு நம்பிக்கை உண்டு. ஏனெனில் தேவன் அவரது பிள்ளைகள் அனைவரையும் நேசிப்பதாலும், பாவநிவர்த்தியும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்அன்பும் அனைத்துக் காரியங்களையும் சாத்தியமாக்குகிறது.*

|v43

*போதையின் சங்கிலிகளிலிருந்து ஒருவரை விடுதலையாக்க முடிகிற அற்புதமான குணமாக்குதலின் ஆசீர்வாதத்தை நான் பார்க்கிறேன். பாவநிவர்த்தியின் வல்லமையில் நாம் நம்பிக்கை வைக்கும்போது கர்த்தர் நமது மேய்ப்பராயிருக்கிறார், நாம் தாழ்ச்சியடைவதில்லை. போதைக்கு அடிமையானவர்களை அவர்களின்  அடிமைத்தனத்திலிருந்து கர்த்தரால் விடுதலையாக்க முடியும், விடுதலையாக்குவார் என நான் அறிவேன். ஏனெனில் அப்போஸ்தலனாகிய பவுல், “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப்  பெலனுண்டு” (பிலிப்பியர் 4:13) என அறிக்கையிடுகிறான். இந்த நேரத்தில் தங்கள் வாழ்வில் இந்த சவாலுடன் போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு இது சரியாயிருக்குமெனவும் அது அப்படியே இருக்கவும் எனது சகோதர சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தாழ்மையுடன் நான் ஜெபிக்கிறேன், ஆமென்.*

|v44

*குறிப்புகள்*

|v45

1.

|v46

As a noun, *addiction* has three senses, one being “a surrender to a master” audioenglish.net/dictionary/addiction.htm).

|v47

2.

|v48

See National Institute on Drug Abuse, *Drugs, Brains, and Behavior—the Science of Addiction* (2010), 18, drugabuse.gov/scienceofaddiction/sciofaddiction.pdf.

|v49

3.

|v50

See Erika Potter, “Drug Deaths Overtake Auto Deaths in Utah,” Dec. 2009, universe.byu.edu/node/4477.

|v51

4.

|v52

See National Institute on Drug Abuse, “The Neurobiology of Drug Addiction,” section IV, no. 30, drugabuse.gov/pubs/teaching/teaching2/teaching5.html; see also drugabuse.gov/funding/budget08.html.

|v53

*லியஹோனா*

|v54

*நவம்பர் 2010*